படி அறிவித்த அறிவிப்பை சில பத்திரிகைகள் திடீரென ஒத்தி வைக்கப்பட்டது என செய்திகளாக வெளியிட்டுள்ளது சரியல்ல என்பதை மீண்டும் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

4. 20—4—1993 அன்று அவை ஒத்திவைக்கப்பட்ட பிறகு சில எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அவைக்குள்ளேயே தங்கியது பற்றி சில பத்திரிகைகளில் வந்துள்ள செய்தி குறித்து—பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

முற்பகல் 11—10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 20—4—1993 அன்று முறைப்படி பேரவைக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டவுடன் என்றைக்கும் வழக்கம்போல செய்வது போல பேரவை மண்டபத்திலுள்ள மின் விளக்குகள் மற்றும் குளிர்சாதன வசதிகளை உடனடியாக சிறிது நேரத்தில் அன்றாடம் இது தொடர்புடைய அலுவலர்கள் நிறுத்துவது போன்றே நேற்றும் நிறுத்தினார்கள். அதன் பின்னர் காங்கிரஸ் தரப்பில் சில உறுப்பினர்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் எக்கட்சியையும் சாராத உறுப்பினர் திரு. குமாரதாஸ் அவர்களும் பேரவையின் உள்ளே இருந்ததாகத் தெரிய வருகிறது. உறுப்பினர்கள் எந்த நேரத்திலேயும் பேரவையை விட்டு வெளியே செல்லும் வாய்ப்புக்கள் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், உறுப்பினர்கள் மாலை 6—00 மணி வரையில் தொடர்ந்து பேரவையிலேயே இருந்தமையாலும், அவர்கள் தொடர்ந்து இருக்கப் போகிறோம் என்று தெரிவித்து இருப்பதாக அவைக் காவலர்கள் வந்து தெரிவித்தவுடன் மாலை 6—30 மணி அளவில் பேரவையின் மின் விளக்குகள் உடனடியாக எரியவிடப்பட்டன. குளிர்சாதன வசதியும் உடனடியாக ஏற்பாடு செய்யப்பட்டது. மேலும், உறுப்பினர்களுக்கு இரவு உணவு தேவையா என்பதை செயலக மார்ஷல் மூலமாகக் கேட்டறியப்பட்டது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுக்கு உணவு தேவையில்லை என்றும், தண்ணீர் மட்டும் அனைவருக்கும் தந்தால் போதும் என்றும் கூறினார்கள். மேலும், தாங்கள் உண்ணாவிரதம் இருப்பதாகவும், இந்த நிலையில் தங்களுக்கு உணவு வேண்டுமா என்று கேட்பது, எங்களை கிண்டல் செய்வதாக உள்ளது என்றும் அவர்கள் மார்ஷலிடம் தெரிவித்ததாகத் தெரிகிறது. உடனடியாக அவர்கள் விரும்பிய வண்ணம், தண்ணீர் மட்டும் கேட்ட காரணத்தால் சுத்தப்படுத்தப்பட்ட ''டிஸ்ட்டில்ட் வாட்டர்'' பிஸ்லேரி தண்ணீர் அவர்களுக்கு வழங்கப்பட்டது. இதற்கிடையில் உறுப்பினர்கள் வெளியிலிருந்து பிஸ்கட் மற்றும் சில உணவு வகைகள் வரவழைத்து சாப்பிட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பிஸ்லேரி தண்ணீர் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

20-4-1993 அன்று அவை ஒத்திவைக்கப்பட்ட பிறகு சில எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அவைக்குள்ளேயே தங்கியது பற்றி சில பத்திரிகைகளில் வந்துள்ள செய்தி குறித்து—பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

[பேரவைத் தலைவர்] [1993 ஏப்ரல் 21

பேரவையில் மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் குமரி அனந்தன், தம்புசாமி, பழனிசாமி, அதன் பின்னர் அவர்களோடு வந்து சேர்ந்து கொண்ட பரிதி இளம்வழுதி மற்றும் சில உறுப்பினர்கள் எதிர்க்கட்சித் தலைவர் இருக்கைக்குப் பக்கத்தில் ஒவ்வொருவராக வந்து நின்று பேசியதாகத் தெரிய வருகிறது. உறுப்பினர்கள் இரவிலும் பேரவையிலேயே தொடர்ந்து இருந்த காரணத்தால் அவர்களுக்கு தலையணை மற்றும் போர்வைகள் தேவைப்படுமா என்று கேட்டறியப்பட்டது. ஆனால், அவர்கள் தேவையில்லை என்று கூறிவிட்டனர். உறுப்பினர்கள் வசதிக்காக முன்னாள் மேலவை மண்டபத்தின் அருகாமையில் உள்ள கழிப்பறைகளும் திறந்து வைக்கப்பட்டு இருந்தன. பெண் உறுப்பினர்கள் வசதிக்காக பெண் உறுப்பினர்கள் ஓய்வறையும் திறந்து வைக்கப்பட்டிருந்தது. அங்கும் கழிப்பறை வசதி இருக்கிறது என்பது உறுப்பினர்களுக்குத் தெரியும். இந்தக் கழிப்பறைகளை அவ்வப்போது சுத்தம் செய்வதற்கும் இரவு நேரத்திலும் கூட இங்கே துப்புரவுப் பணியாளர்கள் வரவழைக்கப்பட்டு அந்தப் பணியையும் செய்ய அறிவுறுத்தப்பட்டார்கள்.

சில உறுப்பினர்கள் இரவில் வெளியிலிருந்து எதிர்க்கட்சித் தலைவர் அறையில் தங்கியிருந்த விருந்தினர்களால் கொண்டு வரப்பட்ட உணவைச் சாப்பிட்டதாகவும் தெரிய வருகிறது. இந்த நிலையில் சட்டப்பேரவைச் செயலாளர், சில பத்திரிகைகளில் வந்துள்ளதைப் போல எதிர்க்கட்சித் தலைவரையோ மற்றும் சில உறுப்பினர்களையோ சந்திக்கவில்லை என்பதையும் குறிப்பிட வேண்டியுள்ளது. நேற்றைய இரவு முழுவதும் மாண்புமிகு உறுப்பினர்கள் பேரவையிலேயே தங்கினார்கள். இரவு பேரவையிலும் தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தன. இதுபோன்ற சம்பவங்கள் பற்றி பிரச்சினை வருகிற போது '' கவுல் அண்ட் ஷக்தர் '' எழுதிய பாராளுமன்ற நடைமுறைகளும் வழிமுறைகளும் என்ற நூலில் மூன்றாம் பதிப்பு பக்கம் 254-இல் எந்த ஒரு உறுப்பினரும் பேரவை ஒத்தி வைத்தபின் அதிகபட்சம் ஒரு மணி நேரம் வரை பேரவையில் இருக்கலாம் என்றும், அதற்கு பிறகு இருக்க வேண்டுமானால் பேரவைத் தலைவரிடம் முன்னனுமதி பெற்றுத்தான் இருக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முற்பகல் 11-15.

28—4—1965 அன்று பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தின்போது மேற்கண்டவாறு முடிவு எடுக்கப்பட்டதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

20-4-1993 அன்று அவை ஒத்திவைக்கப்பட்ட பிறகு சில 369 எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அவைக்குள்ளேயே தங்கியது பற்றி சில பத்திரிகைகளில் வந்துள்ள செய்தி குறித்து— பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

1993 ஏப்ரல் 21] [பேரவைத் தலைவர்]

இதேபோன்று உறுப்பினர்கள், தர்ணா உண்ணாவிரதம் மற்றும் வேறுவிதமான மத சம்டந்தப்பட்ட நிகழ்ச்சிகளில் பேரவைக்குள் ஈடுபடக்கூடாது என பாராளுமன்றத்தில் 28—4—1960 ஆம் தேதி நடைபெற்ற விவாதத்தில் முடிவு எடுக்கப்பட்டதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து பேரவைத் தலைவர் அவர்களைச் சந்திக்க வந்த நிருபர்களிடமும் இந்த விளக்கத்தைத் தெரிவித்து இருக்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர், மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் மற்றும் அரசு தலைமைக் கொறடா ஆகியோரும் பேரவைத் தலைவர் அறையிலேயே இருந்தோம். பேரவைச் செயலாளரும் செயலக அலுவலர்களும் நேற்றையதினம் இரவு அலுவலக திலேயே இருந்தனர். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அறை யிலேயும் சில விருந்தினர்கள் தங்கியிருந்தார்கள்.

பேரவையிலிருந்த உறுப்பினர்கள் பேரவையை விட்டு வெளியேவர வாய்ப்பு இருந்ததனாலும், உறுப்பினர்கள் உள்ளே இருந்து வெளியே செல்வதற்கும், வெளியேயிருந்து உள்ளே வருவதற்கும் ஒரு நுழைவு வாயில் மூலமாக மாண்புமிகு பெண் உறுப்பினர்கள் ஓய்வு அறைக்கு எதிரில் உள்ள அந்த வாயில் திறந்து வைக்கப்பட்டு, உள்ளே வருபவர்களும் வெளியே செல் பவர்களும் அ மதிக்கப்பட்டார்கள் என்பதும் நடந்த சம்பவம் ஆகும். சில செய்தித் தாள்களில் செய்தியாக வெளிவந்து இருப் பதைப் போலவும் சிலர் வெளியில் அறிக்கைகளாக கொடுத் திருப்பதைப் போன்றும், எந்த உறுப்பினரும் இங்கே சிறை வைக்கப்பட்டதைப் போன்றோ வெளியே செல்ல முடியாமலோ, அல்லது உள்ளே வரமுடியாமலோ இருந்த நிகழ்வு இல்லை என் பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நேற்றைய தினம் நடந்த சம்பவம் என்பது நான் இப்போது தெரிவித்த விவரங்களிலிருந்து புலப்படும். பேரவை முடிந்த ஒரு மணி நேரத்திற்குப் பின்னர் எவரும் பேரவைக்குள் இருத்தலா காது என்கிற தெளிவான நடைமுறைகள் இருந்தும் கூட சில மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கேயே இருக்கப் போகிறோம் என்று வற்புறுத்திய செய்தி தெரிந்தவுடன் அவர்களுக்கு விளக்கு வசதிகளும் ஏனைய கழிவறை மற்றும் தூங்குவதற்குரிய வசதிகளும் இங்கே இயற்கையாகவே செய்யப்பட்டிருந்தன என்பதுதான் நடந்த சம்பவமாகும். எனவே சில செய்தித் தாள்களில் வந்திருப்பவைப் போன்று எந்தவிதமான அசம்பா விதமும் இங்கே நடைபெறுகிற சூழ்நிலை எதுவும் நேற்று நடைபெறவில்லை. விதிமுறைகளின்படி அந்த நேரத்திற்குப் பின்னரும் இருந்தவர்கள் வேறு எந்த நடவடிக்கைக்கும் ஆளா

காத அளவிற்கு அவர்கள்—மாண்புமிகு உறுப்பினர்கள், அவர்கள்—விருப்பப்படி இருக்க விரும்புகிறார்கள் என்று சொன்னால் இருக்கட்டும் என்கிற பெருந்தன்மையின் காரணமாக அவர்கள் இங்கே இருக்க அனுமதிக்கப்பட்டும் நான் சொன்ன வசதிகள் எல்லாம் சில செய்யப்பட்டும், மேலும் சில வசதிகள் செய்ய முன்வந்தும், நேற்றையதினம் இரவு நேரத்தில் இங்கே இருந்த பத்திரிகை நிருபர்களும் நன்கு அறிவீர்கள் என்கிற காரணத்தாலும் இது நாட்டுக்கும் தெரியவேண்டும் என்கிற காரணத்தால், இதற்கு வேறு எந்த சாட்சியும் தேவையில்லை, நிருபர்களே இருந்த காரணத்தால் இது நடந்த சம்பவம் என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. உறுப்பினர்களைப் பேரவையிலிருந்து வெளியேற்றும்போது காவலர்களைத் தாக்கிய மூவர் மீது நடவடிக்கை எடுப்பது குறித்து பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

முற்பகல் 11–20

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, இன்று காலையில் விதிமுறைகளுக்கு சற்றும் ஒத்துவராது, விதிமுறைகளுக்கு முழுவதும் புறம்பாக இங்கே நிகழ்வுகள் நடந்ததை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிந்திர்கள். பேரவை விதி 32,

"The first hour of every sitting shall unless the House unanimously resolves otherwise be available for the asking and answering of questions. The speaker may, in his discretion, extend the time for questions:

Provided that, the Speker may dispense with the question hour on the first day if the House is to meet at or after 10 A.M. in the fore-noon."

என்கிற அந்த 10 ஏ.எம். என்று இருப்பது ஏற்கெனவே பேரவை 8-30-க்கு கூடிக் கொண்டிருந்தபோது—இப்போது பேரவை கூடிக் கொண்டிருக்கிற நேரம் 10-00 மணி என்று ஆனதற்கு பிறகு பத்திலேயிருந்து 2 வரை என்று அலுவல் நேரம் என இருக்கிற போது, அந்த ரெலவன்ட் ரூல்ஸ் எல்லாம் அந்த ஒரு மணி நேரம் தள்ளி தள்ளி எல்லாவற்றிக்கும் செய்யப்பட்டிருக்கிறது என்பதை நன்கு அறிவீர்கள், கில்லட்டின் டைம் கூட அந்த 9 மணி, 8½ மணி அளவில் கூடிக்கொண்டிருந்தபோது 1 மணி என்று இருந்தது இப்போது பத்து மணி என்று இருப்பதால் 1½ மணி என்று திருத்தி விதிகள் குழுவில் அந்த ரெவலன்ட் விதிகள்அனைத்தும் திருத்தப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே விதி இப்படி இருக்க பேரவையில் இன்று காலை கேள்வி நேரம் என்று குறிப்பிட்டு இந்த நிகழ்ச்சி நிரல் ஒதுக்கியதற்குப் பின்னரும் எதிர்க்கட்சித் தலைவரும் ஏனைய பலஉறுப்பினர்களும் கேள்வி நேரத்தின் போதே விதிமுறை